# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.739/2018

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகமாயி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேதகூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.2, இறப்புசான்று நகல் ம.சா.ஆ.3, வாரிசுசான்று நகல் ம.சா.ஆ.4, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ம.சா.ஆ.5,

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

எனக்கு விபத்துபற்றி நேரடியாக தெரியாது. பதிவு எண் தெரியாத அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்கணவர் சென்ற மோட்டார்சைக்கிளை ஓட்டிசென்றவர் லோகேஸ்வரன் ஆவார். அவர் என்கணவரின் நண்பர் ஆவார். அவர் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மோட்டார்சைக்கிளின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனத்திற்கு எதிராக நான் இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய குழந்தைகள் திருமணமாகி தனித்தனியாக இருக்கிறார்கள் என்றால் படித்துகொண்டு இருக்கிறார்கள். என்கணவர் மாதம் ரூ.20ஆயிரம் வருமானம் ஈட்டிவந்தார்

என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மோட்டார்சைக்கிளை ஓட்டிசென்றவர்மீது தான் தவறு உள்ளது என்று என்தரப்பில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்திற்கு மோட்டார்சைக்கிளை ஓட்டியர் காரணம் இல்லையென்பதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால்சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்துபோனார் என்றால் சரியல்ல. உடம்பு முழுவதும் காயம்ஏற்பட்டது. லோகேஸ்வரனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரியல்ல. நான் ஏதாவது நஷ்டஈடு கோரவேண்டுமென்றால் அரசு பேருந்து நிர்வாகத்திடம் தான் கோரமுடியும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.